அளவிற்குத் தேவைப்படும் மண்ணெண்ணெயை மட்டுமே வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும், இயன்ற வரையில் சமையலுக்கு வேறு எரிபொருளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் பொதுமக்களை வேண்டுகிறேன்.

(4) நடைமுறைக்கேள்வி

ஓர் உறுப்பினர் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்பு அறிவிக்கை கொடுத்திருக்கும்போது, அதே பொருள் குறித்து அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of order. About three days ago I have given notice of a Call Attention Motion on this subject and when the Hon. Chief Minister is ready with the statement, why should the Department delay it. I would request the Hon. Speaker to help us in seeing that whenever a Call Attention Motion is given notice of and the concerned Minister is ready with the statement, the Hon. Minister should first make a statement in regard to that Call Attention Motion so that the concerned Member could have an opportunity to put one or two supplementary questions.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அங்கத்தினர்கள் கொடுத்திருக்கின்ற கால் அட்டென்ஷன் நோட்டீசுக்குப் பதிலாக இதைக் கொடுத்ததாகக் கருதிவிடக் கூடாது. எண்ணெய் தட்டுப்பாடு தமிழ்நாட்டில் வந்து விடக்கூடாது என்பதற்கு அரசாங்கம் எண்ணெய் அதிபர்களை எல்லாம் அழைத்து வைத்து கடந்த ஒருவாரகாலமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். கார்டுகள் எல்லாம் வழங்க, அச்சிட ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் எல்லாம் ஒருவாறு ஒரு முடிவுக்கு வந்த நிலையில்தான் முதல் அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். இதைக் கொடுத்ததன் மூலம் அங்கத்தினர்களுக்கு இருக்கிற உரிமையைப் பறிப்பதாக யாரும் எடுத்துக்கொள்ளக் கூடாது. அவை கூடுகிற நேரத்தில் எந்த அறிக்கையும் அவைக்குத்தான் முதலில் அளிக்கப்பட வேண்டும் என்கிற நிலையை ஒட்டி இந்த அறிக்கையை முதலமைச்சர் அவர்கள் இன்று இந்த அவையில் அளித்தார்கள். கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்ததனால்தான் இந்த அறிக்கை வந்தது என்பதாகவும் தவறாகக் கருதிவிடக் கூடாது. இதனால் அங்கத்தினர்கள் உரிமை பறிக்கப்பட்டு விட்டதாகவும் கருதக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்த காரணத்தினால்தான் இந்த அறிக்கை வந்தது என்று சொல்லவில்லை. இதுபற்றி நான் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னமேயே கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையும் அதற்கு ஏற்றவகையில் விரிவாக இருப்பதனால் அந்த கால் அட்டென்ஷன் நோட்டீசையும் சேர்த்து—அதற்கு இது கொடுத்ததாக எடுத்துக்கொள்ளக் கூடாதா என்றுதான் நான் கேட்டேன். நாங்கள் கேள்வி போடுகிற நேரத்தில் அதற்கான உத்தரவுகள் முன்பே போடப்பட்டுவிட்டன என்று சில சமயம் சொல்லுவதும் உண்டு. ஆக நாங்கள் கேள்வி கொடுத்து, கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்துத்தான் அரசாங்கம் அதற்குப் பிறகு நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லவில்லை. 3 நாட்கள் முன்னதாக நான் கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருப்பதனால் அதையும் எடுத்து இந்த அறிக்கை அளிப்பதாக இருந்தால் எங்களுடைய உரிமைகளும் பாதுகாக்கப்படும். இனிமேலாவது அப்படிச் செய்ய வேண்டும் என்று நான் கோரினேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் ய பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் . . . . கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருக்கிறபோது அதனை எடுத்துக் கொள்ளாது இது போன்ற அறிக்கை அளிப்பதாவது உறுப்பினர்களுக்கு அக்கறை இல்லை, தங்கள் கடமைகளைச் செய்யவில்லை, ஆனால் அரசாங்கம் தன் கடமையைச் செய்து வருகிறது என்பதான தவறான கருத்து ஏற்பட இடமளிக்கும். இதுபோல செய்வது முறையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அநேகமாக கால் அட்டென்ஷன் நோட்டிசும், அறிக்கையும் ஒன்றாகச் சேர்ந்துவிட்டதாகக் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நாட்டுப் பிரச்சினையில் அக்கறை இல்லை என்று சொல்ல முடியாது. அதுவும் நெருக்கடியான காலத்தில் அவர்களுக்கு இருக்கிற அக்கறையை நான் மதிக்கிறேன். அந்த அறிக்கை கால் அட்டன்ஷன் நோட்டீசுக்கு அளிக்கிற அறிக்கையில் இருந்தும் மாறுபட்ட ஒன்றாக ஆகிவிட்ட காரணத்தினால் அதற்காக இதைப் படிக்கவில்லை. அறிக்கை வந்த பிறகு, கால் அட்டென்ஷன் நோட்டீஸ் பற்றியும் அவையில் வந்துவிட்ட காரணத்தினால் இதோடு பிரச்சினையை விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

(5) கவன ஈர்ப்பு

நாங்குநேரியிலுள்ள 'சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்' மூடப்பட்டதும் தொழிலாளர் அல்லலும்.

திரு. எஸ். முகமது கோதர் முகைதின்: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் நாங்குனேரியிலுள்ள 'சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்' என்ற மில் மூடப்பட்டு, அங்கு வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு 7—9—1971 முதல் சம்பளமும் போனசும், ரேஷனும் கொடுக்கப்படாமல் இருப்பதால் சுமார் 640 தொழிலாளர் குடும்பங்கள் அவதியுற்றுவரும் சூழ்நிலையில் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் நாங்குனேரியிலுள்ள 'சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்' என்ற மில் மூடப்பட்டு, அங்கு வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு 7—9—1971 முதல் சம்பளமும் போனசும், ரேஷனும் கொடுக்கப்படாமல் இருப்பதால் சுமார் 640 தொழிலாளர் குடும்பங்கள் அவதியுற்றுவரும் சூழ்நிலையில் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, நாங்குநேரியிலுள்ள 'சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்' என்ற மில் மூடப்பட்டு அங்கு பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதியம், பூரிப்பு ஊதியம், உணவுப் பங்கீடு முதலியவை அளிக்கப்படாதது குறித்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட விவர அறிக்கையை அளிக்கிறேன்.